# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை,** (Pension Pay Office பின்புறம்),
**நந்தனம், சென்னை– 600 035.** தொலைபேசி எண். 044-29515590

**விசாரணை நாள் 07.10.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்கள் (1) SA 13220-E-2024 (2) CP 4810-E-2024 (3) CP 4811-E-2024**

| | | |
|---|---|---|
| திரு செ.பாக்கியராஜ் | .. | மேல்முறையீட்டாளர் |
| */எதிர்/* | | |
| பொதுத் தகவல் அலுவலர்/<br>நிர்வாக அலுவலர்,<br>பொது சுகாதாரம் மற்றும்<br>நோய் தடுப்பு மருந்துத் துறை,<br>சென்னை - 600 006 | .. | பொது அதிகார அமைப்பு |

******

**இறுதி ஆணை**

1) இவ்வாணையத்தின் 10.08.2026 நாளிட்ட ஆணையை தொடர்ந்து சென்னை, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறையின் நிர்வாக அலுவலர் திருமதி எ.ஜெயந்தி இவ்வாணையத்தில் 29.09.2026 அன்று ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவுபடி, மனுதாரருக்கு களஆய்வு செய்வதற்கு அனுமதியளிக்கப்பட்டு, அவரும் பொது அதிகார அமைப்பில் 20.08.2026 அன்று ஆஜராகி ஆவணங்களை பார்வையிட்டார் என்றும், பின்னர் அவர் கோரிய தகவல்கள் தொடர்பான கோப்புகளின் பக்கங்கள் அனைத்தும் மனுதாரருக்கு வழங்கப்பட்ட நிலையில், அவை தன்வசம் உள்ளது எனவும், அதன் விரிவான விளக்கத்தை தனக்கு அளிக்க வேண்டுமென தொடர்பில்லாத நிகழ்வுகளுக்கான விவரங்களை கோரி, வாக்குவாதத்தில் ஈடுபட்டார் என்றும், இனம் 4 மற்றும் 6 தொடர்பான ஆவணங்களை பார்வையிடாமல் சென்று விட்டார் என்றும் தெரிவித்து அறிக்கை சமர்ப்பித்தார். மேலும், மனுதாரருக்கு 13.09.2026 தேதியிட்டு அனுப்பப்பட்ட பதில் கடிதத்தின் நகலையும், மனுதாரர் ஆவணங்களை பார்வையிட்டபோது எடுக்கப்பட்ட புகைப்படத்தின் நகலையும் ஆணையத்தில் சமர்ப்பித்தார்.

2) வழங்கப்பட்ட ஆவணங்களை பரிசீலித்த ஆணையம், இவ்வாணையத்தின் 10.08.2026 நாளிட்ட ஆணை நிறைவேற்றப்பட்டுள்ளதன் அடிப்படையில் மேற்படி ஒரு மேல்முறையீட்டு மனுவையும், ஒரு புகார் மனுவையும் முற்றாக்கம் செய்து உத்தரவிடுகிறது.

**ஒம்/- (அபய் குமார் சிங்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்கள் (1) SA 13220-E-2024 (2) CP 4810-E-2024 (3) CP 4811-E-2024</u>**

**<u>பெறுநர்</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
நிர்வாக அலுவலர்,
பொது சுகாதாரம் மற்றும்
நோய் தடுப்பு மருந்துத் துறை,
சென்னை - 600 006

திரு செ.பாக்கியராஜ்.
எண்.1/369, மாரியம்மன் கோவில் தெரு,
சின்னசேலம் வட்டம்,
கரடிசித்தூ'ர் - 606 207
கள்ளக்குறிச்சி மாவட்டம்

Copy to file
CR/PA